மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 335, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

335—

பேருந்து வசதி

***37578—திரு. க. பாலகிருஷ்ணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து கடலூர் மாவட்டத்திலுள்ள பிச்சாவரத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சென்னையிலிருந்து சிதம்பரத்திற்கு தினசரி 30 புறநகர் அரசுப் பேருந்துகள்மூலம் 45 நடைகளும், சிதம்பரத்திலிருந்து பிச்சாவரத்திற்கு 3 அரசு நகரப் பேருந்துகள்மூலம் 12 நடைகளும், இரண்டு தனியார் பேருந்துகள்மூலம் 20 நடைகளும் தினசரி இயக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, சென்னையிலிருந்து பிச்சாவரத்திற்குச் செல்லும் பயணிகள் சிதம்பரத்திற்குச் சென்று, அங்கிருந்து நகரப் பேருந்து வசதியைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து சிதம்பரத்திற்குச் சென்று, சிதம்பரத்திலிருந்து பிச்சாவரத்திற்குச் செல்வதைவிட, சிதம்பரம்—பாண்டிச்சேரி—கடலூர்—பரங்கிப்பேட்டை வழியாக*

2014 ஆகஸ்ட் 5]

பிச்சாவரத்திற்குச் செல்வது மிகவும் எளிதானது. பிச்சாவரம் என்பது ஆசியாவிலேயே அலையாத்திக் காடுகள் இருக்கிற இரண்டாவது சுற்றுலா மையம். சுற்றுலா வளர்ச்சி என்பது நாட்டுக்கு மற்றும் நம்முடைய மக்கள் வாழ்வாதாரத்திற்கு மிகவும் பயனுள்ளது. மேலும், பரங்கிப்பேட்டையிலே அமைக்கப்படுகிற அனல் மின் நிலையத்தில் 5,000-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். பொறியாளர்கள் ஏராளமான பேர் இருக்கின்றனர். இவர்களெல்லாம் சென்னை வந்து செல்வதற்கு சிதம்பரம் சென்று, பிறகு அங்கிருந்து சென்னை வருவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. எனவே, சிதம்பரத்திலே இருந்து பிச்சாவரத்திற்கு நேரடியாகப் பேருந்து விடுகிறபோது, அங்கே இருக்கிற மக்கள் சென்னைக்கும், பிச்சாவரத்திற்கும் சென்று வருவதற்கு எளிதாக அமையும் என்கிற காரணத்தினால், இதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் தொகுதி மக்கள் பயன்பெறும் வகையில் மூன்று ஆண்டுகளில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 20 புதிய வழித்தட பேருந்துகளையும் (மேசையைத் தட்டும் ஒலி), 10 வழித்தட நீட்டிப்புப் பேருந்துகளையும் வழங்கி, மக்களுடைய பயன்பாட்டில் இன்று அவை உள்ளன. சென்னையிலிருந்து சிதம்பரம் செல்லும் பேருந்துகளில் 82 சதவிகித பயணிகள் அடர்வு இருக்கின்றது. ஆனால், சிதம்பரத்திலிருந்து பிச்சாவரம் செல்லும் பேருந்துகளில் 58 சதவிகிதம் மட்டுமே பயணிகளினுடைய அடர்வு உள்ளது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையின்படி, சென்னையிலிருந்து பிச்சாவரத்திற்கு நேரடியாகப் பேருந்து இயக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. க. பாலகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரத்திற்குப் பக்கத்தில் சி.முட்லூரில் அரசு கலைக் கல்லூரி இருக்கிறது. அங்கே சென்று வருவதற்கென சிறப்புப் பேருந்து இல்லாததனால், மாணவர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். எனவே, காலையிலும், மாலையிலும் மாணவ, மாணவிகள் அங்கு சென்று வருவதற்கு, அரசு சிறப்புப் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி நேரங்களிலும், கல்லூரி நேரங்களிலும் சிறப்பான முறையில் போக்குவரத்து வசதிகளை மாணவச் செல்வங்கள் பெற வேண்டும் என்பதற்காகத்தான், மூன்று ஆண்டுகளில் 1,436 புதிய வழித்தடங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி, இன்று அவை மக்களின் பயன்பாட்டில் உள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய கல்லூரி சம்பந்தமாக இதுவரை எந்தவொரு கோரிக்கையும் வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையினை ஏற்று, ஆய்வு செய்து, பயணிகளுடைய எண்ணிக்கை, மாணவச் செல்வங்களுடைய எண்ணிக்கைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 336, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*